DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 190/2021

PROSECUTION WITNESS L.W.9/P.W.7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அசோகன் | தகப்பனார் பெயர் | சாமுவேல் |
| கிராமம் | | ஊர் | ஈரோடு |
| தொழில் | உதவி ஆய்வாளர் (ஓய்வு) | வயது | |

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 11.11.2025

**முதல் விசாரணை**

1) நான் ஈரோடு காவல் கட்டுப்பாட்டு அறையில் உதவி ஆய்வாளர் ஆக பணிபுரிந்து 31.05.2025 ம் தேதி பணி ஓய்வு பெற்றுவிட்டேன்.

2) ஈரோடு தாலுக்கா காவல்நிலைய தலைமைக் காவலர் 2048 அந்தோணிராஜ் என்பவர் ஈரோடு காவல்நிலைய குற்ற எண்.431/2020 சட்டபிரிவு 294(b), 324, 506 (ii) இதச வழக்கில் வழக்கு பதிவு செய்து எனது புலன் விசாரணைக்கு வைத்ததை 05.05.2020 ம் தேதி நான் எடுத்துக் கொண்டு பகல் 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் இளங்கோ, சந்துரு ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3,4ஆக குறியீடு செய்யப்படுகிறது**) சம்பவ இடத்தில் எதிரி பிரகாஷ் விட்டு சென்ற உருட்டு கட்டை ஒன்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 14.00 மணிக்கு கைப்பற்றினேன். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3) சாட்சிகள் துரைசாமி, கிருஷ்ணமூர்த்தி, சுப்பிரமணி, தாஜூதின் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு 07.05.2020 ம் தேதி தலைமறைவாகி இருந்த எதிரி பிரகாஷ் என்பவரை நம்பகமான தகவலின் அடிப்படையில் ஈரோடு, முள்ளாம்பரப்பு பஸ் நிறுத்ததில் நின்றிருந்தவரை போலீஸ் பார்ட்டியுடன் தப்ப முயன்றவரை விசாரிக்க அவர் தனது அண்ணன் முறையான துரைசாமியை தகாத வார்த்தைபேசி, கட்டையால் அடித்து, கொலை மிரட்டல் விடுத்ததை ஒப்புக் கொண்டதால் காலை 7.00 மணிக்கு கைது செய்து, நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து தக்க பாதுகாப்பில் வைத்தேன்.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.11 18:19:18 +0530

4) மேற்படி எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னிட்டு நான் சம்பவ இடத்தில் கைப்பற்றிய எதிரி பயன்படுத்திய உருட்டு கட்டையை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**படிவம் 91 அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் மருத்துவ அதிகாரி திரு. ஆனந்தன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றேன். சிடி ஸ்கேன் எடுக்க அறிவுறுத்தியும் புகார்தாரர் உடன்படவில்லை என்பதால் கருத்துரை வழங்க இயலாது என மருத்துவர் சான்று வழங்கினார். (**விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) 04.07.2020 ம் தேதி எதிரி மீது சட்டபிரிவு 294(b), 324, 506 (ii) இதசவில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) புகார்தாரர் அவருக்கு ஏற்பட்டதாக சொன்ன காயங்களுக்கு வேறு எங்கும் சிகிச்சை பெற்றாரா என்பதை பற்றி நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரம், தேதி, இடத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றாலும், நான் சொன்னது போல் எந்த பொருளும் சம்பவ இடத்தில் கைப்பற்றவில்லை என்றாலும், மேற்படி ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. வழக்கில் கைப்பற்றப்பட்ட குச்சி எந்த இடத்திலிருந்தும் கிடைக்கக் கூடியது என்றாலும், சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் கைப்பற்றப்பட்ட குச்சியில் புகார்தாரரின் இரத்தம் எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரி கைது செய்ததாக சொல்லப்படும் முள்ளாம்பரப்பு பேருந்து நிறுத்தத்தில் இருந்து 30 அடி தூரத்தில் தான் எதிரியின் கடை மற்றும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் உள்ளது என்றால் இல்லை 100 அடி தூரம் இருக்கும். உண்மையில் சம்பவம் நடைபெற்று இருந்தால் 2 நாட்கள் கழித்து தலைமறைவாகி இருந்ததாக சொல்லப்படும் எதிரி அதே இடத்தில் இருந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வழக்கில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், புகார்தாரர் குடும்பத்திற்கும், எதிரிக்கும் சொத்து சம்மந்தமான பிரச்சனைகள் இருந்து வந்ததால் அதனால் ஏற்பட்ட வெறுப்பினால் புகார்தாரரை வைத்து அவரது தம்பி எதிரியின் மீது இவ்வழக்கை போலியாக கொடுத்துள்ளார் என்றாலும், சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. குற்றபத்திரிக்கையில் சொல்லப்பட்டுள்ள பிரிவுகளின் படி இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. புகார்தாரர் சரியான மனநிலை கொண்டவர் அல்ல என்பதால் அவரை வைத்து அவரது தம்பி கிருஷ்ணமூர்த்தி புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் 5 வது காலத்தில் Extreme talking, irrelevant at

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.11 18:19:24 +0530

times என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1 கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரது செல்வாக்கிற்கு அடிபணிந்து நடக்காத சம்பவத்திற்கு எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு ஆதரவாக வேறு எவ்வித சாட்சிகளையும் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.11 18:19:28 +0530

Judicial Magistrate No.I,
Erode.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 190/2021

PROSECUTION WITNESS L.W.8/P.W.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அந்தோணிராஜ் | தகப்பனார் பெயர் | பால்ராஜ் |
| கிராமம் | அவல்பூந்துறை | ஊர் | ஈரோடு |
| தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் | வயது | |

**எதிரி ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 11.11.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 03.05.2020 ம் தேதி ஈரோடு தாலுக்கா காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக இருந்தபோது, இரவு 23.20 மணிக்கு ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து துரைசாமி, வயது 52, த/பெ. அருணாச்சலம் என்பவரது அசால்ட் இன்டிமேசன் கிடைக்கப் பெற்று உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்று துரைசாமி என்பவரின் அசால்ட் இன்டிமேசன் பெற்று பார்க்க, அவர் உள் நோயாளியாக சிகிச்சையில் சேராமல் புற நோயாளியாக சென்றுவிட்டது தெரிந்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து பொது நாட்குறிப்பில் பதிவு செய்தேன். பின்னர் 05.05.2020 ம் தேதி மதியம் 12.45 மணிக்கு நான் அலுவலில் இருந்தபோது, துரைசாமி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று ஈரோடு தாலுக்கா காவல்நிலைய குற்ற எண்.431/2020 சட்டபிரிவு 294(b), 324, 506(ii) இதசவில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையையும், வாதியின் எழுத்து மூலமான புகாரையும் கனம் குற்றவியல் நீதித்துறை எண்.1 அவர்களுக்கு அனுப்பியும், பிற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணை நிமித்தம் உதவி ஆய்வாளர் திரு.அசோகன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். **(புகார் அ.சா.ஆ.1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து 2 நாட்கள் கழித்து தான் புகார் தரப்பட்டது என்றால் சரிதான். புகார் சங்கதிகள் எழுதப்பட்ட கையெழுத்தும்,

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.11.11 18:19:35 +0530

கையொப்பத்திலுள்ள கையெழுத்தும் வெவ்வேறு என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. புகார் அளித்தவரிடம் புகாரை யார் எழுதினார்கள் என்பதை பற்றி விசாரித்தேனா என்றால் இல்லை. அரசு மருத்துவமனையிலிருந்து சென்றபிறகு வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாரா என்பதை பற்றி புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், நான் அது பற்றி விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரரால் புகார் அளிக்கப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு புகார் தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.11 18:19:40 +0530

Judicial Magistrate No.I,

Erode.